# பெனெஸ்டா தனது சில்லறை வணிகத்தின் இருப்பை கோயம்புத்தூரில் விரிவுபடுத்தியுள்ளது




இந்தியாவின் முன்னணி ஜன்னல்கள் மற்றும் கதவுகள் பிராண்டும், சந்தையில் இப்பிரிவில் முன்னணியில் இருக்கும் நிறுவனமுமான பெனெஸ்டா, புதியதாக ஒரு ஷோரூமைத் திறப்பதன் மூலம் தங்களின் சில்லறை வணிகத்தை மேலும் விரிவுபடுத்தி உள்ளது.

இந்த புதிய ஷோரூமின் தொடக்க விழா பற்றி கருத்து தெரிவித்த பினெஸ்டா நிறுவனத்தின் வர்த்தகத் தலைவரான திரு.சாகேத் ஜெயின் "பெனெஸ்டாவின் உத்தியானது வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வெளிப்படையான அணுகுமுறைமற்றும் அதிக நுகர்வோர்களை சென்றடைவது ஆகிய 2 முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது. இதற்காக எங்களின் ஷோரூம்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன் 1000 -த்துக்கும் மேற்பட்டவகைகளில் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை வடிவமைத்து வருகிறோம். வாடிக்கையாளர்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், மழை, தூசி, சத்தம், மாசு ஆகிய சுற்றுச் சூழல் விஷயங்களைக் கருத்தில் கொண்டும் எங்கள் தயாரிப்புகளை வழங்கி வருகிறோம்.

எங்கள் தயாரிப்புகளை ஷோரூம்களில் காட்சிப்படுத்துவதன் மூலம், வாடிக்கையாளர்கள் அவற்றின் வகைகள், பிராண்டின் தரம் ஆகியவற்றைப் பற்றிய அனுபவத்தை பெறமுடியும். மேலும் எங்கள் பிராண்டைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டு முக்கிய முடிவுகளையும் எடுக்க முடியும். வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதியை அதிகரிக்கும் வகையில் பெனெஸ்டா, தங்களின் ஷோரூம்களின் எண்ணிக்கையை அதிகரித்து, நாட்டில் தங்கள் அடிப்படை வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கும். இந்த ஷோரூமை தொடங்கியிருப்பதன் மூலம் தற்போது நாங்கள் இங்குள்ள 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எங்களின் இருப்பை நிலை

நிறுத்தியுள்ளோம். 2020 - ம் ஆண்டின் இறுதிக்குள் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் இதை விரிவுபடுத்த விரும்புகிறோம்" என்றார்.